**இலங்கை செப்பக்டக்றோ சம்மேளனம் - 2024**

---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை செப்பக்டக்றோ சம்மேளனத்தின் (‘‘சம்மேளனம்’’) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தப்பட்ட 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 21(அ) இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சம்மேளனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது

தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- சம்மேளனம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- சம்மேளனத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.5.1 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 73,786 ஆன செலுத்தப்பட வேண்டிய தொகை 02 வருடங்கள் பூராகவும் செலுத்தப்படாமல் காணப்பட்டது. | முன்னாள் பொருளாளர் உடன் பரிசீலனையை மேற்கொண்டு இதை நீக்குதல் தொடர்பான தீர்மானம் ஒன்றை பெற்றுக் கொண்டு அடுத்த வருடத்தில் அறிவிக்கப்படும். | செலுத்தப்பட வேண்டிய தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2024 மே 03 திகதிய 2382/32 ஆம் இலக்க அதி விசேட வருத்தமான அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் சங்கங்களின் பிரமாணங்கள் | | | |
| (i) | பிரிவு 6 (i) | இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் அனைத்து மட்டத்திலும் செப்பக்டக்றோ விளையாட்டை வளர்ச்சி அடைய செய்து முன்னேற்ற வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்று நிருப ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 6 (x) | நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக சம்மேலனம் விளையாட்டு அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முற்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்று நிருப ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க தேசிய வருமானங்கள் சட்டம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள | சம்மேளனம் அதன் மிகை களுக்காக வருமான வரி செலுத்துவதற்கு கடமைப்பட்டிருந்த போதிலும், இதுவரை எந்த ஒரு வருமான வரி என்றும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,267,513 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 313,096 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 954,417 ஆன வீள்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீள்ளிச்சிக்கு பெறுமாத்தேய்வு அத்கறித்தல் மற்றும் விமான பிரவேச பத்திரங்கள் கட்டணச் செலவுகள் அத்கறித்தல் முக்கிய காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விமான பிரவேச பத்திரங்களை கொள்வனவு செய்யும் போது அரசின் பெறுகை வழிகாட்டல் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் ரூபா 4,428,841 ஆன விமான பிரவேச பத்திரங்கள் கொள்வனவு செய்யும் போது அது பின் பற்றப்பட்டு இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

3.2 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 இன் தின கூறிக்காட்டியின் பிரகாரம் தேசிய போட்டிகள் 06 உம், சர்வதேச போட்டிகள் 06 உம் மற்றும் பயிற்சி முகாம்கள் 09 உம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றினுல் தேசிய போட்டிகள் 03 உம் மற்றும் சர்வதேச போட்டிகள் 04உம் பயிற்சி முகாம்கள் செயற்பாடுகள் 07 உம் நடத்தப்பட்டிருக்கவில்லை. | எப்போதும் தின குறிகாட்டி தயாரிக்கப்படுவது முன்னைய வருடத்தின் என்பதுடன் காலநிலை மாற்றங்கள் மற்றும் நிதி நிலைமையின் காரணமாக இது ஒவ்வொரு வருடமும் வேறுபடுகின்றது. | திட்டமிடப்பட்ட ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்ட கால எல்லையினுள் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |